16. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2002–2003, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2002–2003 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2002–2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

2015 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

நிறைவேற்றப்பெற்ற 2002-2003 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	10,99,828	..	..
5	வேளாண்மைத் துறை	..	..	55,000
6	கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை— கால்நடை பராமரிப்பு	..	200	..
14	சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை	178,01,357	..	..
16	கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை— கைத்தறி மற்றும் துணிநூல்	2,16,39,044	..	..
20	நெடுஞ்சாலைகள் துறை	41,53,15,758	..	30,00,000
26	தொழில் துறை	..	1,63,055	..
35	திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	1,88,98,038	..	..
36	பொதுப் பணித் துறை	144,87,14,046	..	..
40	உரக வளர்ச்சித் துறை	..	..	48,66,688

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
48	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	91,24,53,629	..	..
49	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	82,75,35,091	..	..
	பெரு மொத்தம்	366,34,56,791	1,63,255	79,21,688

பிற்பகல் 2–20

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஐ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2003–2004 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

17. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2003–2004, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003–2004 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*